**தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், கிண்டி, சென்னை–32 அவர்களின் செயல்முறை ஆணைகள். முன்னிலை:முனைவர்.மா.வள்ளலார், இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.எண்:அ1/4280/2016,** **நாள்:02-09-2021**

**பொருள்:** தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் - சுனாமி திட்ட முந்தைய பணியாளர் திரு. B.சங்கர் கணேஷ், இளநிலை உதவியாளர் – 28.10.2016 மு.ப. முதல் பணி வரன்முறை செய்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. அரசாணை (நிலை) எண்.105, வருவாய் [DM4(1)] துறை, நாள்.26.02.2016.
2. இவ்வலுவலக செயலல்முறை ஆணை எண். அ1/4280/2016 நாள்.25.10.2016
3. அரசு கடித எண்.23835/வே.வி.1(2)/2016–18 நாள். 07.06.2019, 26.06.2019, 07.01.2020
4. இவ்வலுவலக கடித எண். அ1/4280/2016, நாள். 03.10.2016, 06.07.2017, 28.02.2019, 03.04.2019, 16.05.2019 மற்றும் 03.02.2020.
5. அரசாணை (4ப) எண்.06, வேளாண்மை உழவர் நலத் (வே.வி.1) துறை, நாள்.04.08.2021.

••••••••••

**ஆணை:-**

பார்வை–1ல் காணும் அரசு கடிதத்தில், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய மதுரை உபகோட்ட பிரிவில் காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் கால ஊதிய ஏற்ற முறையில் தற்காலிகமாக பணிநியமனம் செய்து உத்தரவிட்டதை தொடர்ந்து, பார்வை–2 காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, திரு. B.சங்கர் கணேஷ் அவர்கள் வாரிய மதுரை உபகோட்ட பிரிவில் இளநிலை உதவியாளராக 28.10.2016 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4-இல் காணும் இவ்வலுவலகக் கடிதங்களில் தனியரின் பணியினை வரன்முறை செய்ய கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. பார்வை 5–இல் காணும் அரசாணையில், திரு.B.சங்கர்கேணேஷ், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியை சிறப்பு நிகழ்வாகக் கருதி, தனியர் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட நாளான 28.10.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை–5ல் காணும் அரசாணையில் தனியரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்பட்டதைத் தொடந்து தனியரின் பணியினை 28.10.2016 மு.ப. முதல் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

....2

அரசாணை எண். 2852 வேளாண்மைத் துறை நாள் 24.10.1970-ன்படி தனியர் பணிக்காலத்தில் தொடர் மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் காலம் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடித்திடுமாறும் உத்திரவிடப்படுகிறது.

தகுதிகாண் பருவத்தில் உரிய துறைத்தேர்வு, அலுவலக நடைமுறை நூல்தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/–மா.வள்ளலார்,
தலைமைச் செயல் அலுவலர்

பெறுநர்

திரு.B.சங்கர் கணேஷ்,
இளநிலை உதவியாளர்,
தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்,
மதுரை உபகோட்டம்,
மதுரை.

நகல்: வேளாண்மை உற்பத்தி ஆணையர் / அரசு செயலர்,
வேளாண்மைத் துறை, சென்னை-9.

நகல்: உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், மதுரை உபகோட்டம்.

நகல்: சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.

அ1 இருப்புக் கோப்பு
உபரி-2

// உத்தரவின் படி //

உதவிச் செயலர் (வி&பி)

3/9/21